

MINISTRY OF HEALTH
SINGAPORE

National Healthcare Group
Adding years of healthy life

NUH
National University Hospital
A member of the NUHS

Alexandra Health

EASTERN HEALTH ALLIANCE

JurongHealth

SingHealth

SINGHEALTH / PIL / T80R0

நோயாளி தகவல் கையேடு

# தசைப் பிடிப்புக்கான மருந்துகள்

(ANTI-SPASMODIC MEDICATIONS)

புரோபன்தெலின் (Propantheline)
ஹியோசின் புடில்புரோமைட் (Hyoscine Butylbromide)
மெபெவெரைன் (Mebeverine)
அல்வெரைன் (Alverine)
குளோர்டியாசெபோக்சைட் / கிளிடினியம் (Chlordiazepoxide/Clidinium)



## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

**புரோபன்தெலின் (Propantheline), ஹியோசின் புடில்புரோமைட் (Hyoscine Butylbromide), மெபெவெரைன் (Mebeverine), அல்வெரைன் (Alverine) மற்றும் குளோர்டியாசெபோக்சைட்/ கிளிடினியம் முதலியவை, வயிற்று தசைப்பிடிப்புகளைப் போக்கும் மருந்துகளாகும். வயிறு மற்றும் குடல் பகுதிகளில் உள்ள மிருதுவான தசைகளை இவை தளர்த்துகின்றன. எனவே, இரைப்பை மற்றும் குடல்களில் ஏற்படும் திடீர் தசைச் சுருக்கம் அல்லது வலிப்பு போன்றவற்றைப் போக்க இவை பயன்படுத்தப்படுகின்றன. எ.கா. வயிற்றுப்புண் -அல்லாத செரிமானக் கோளாறு மற்றும் மலக்குடல் கோளாறு.**

## மருந்தை நான் **எப்படி** பயன்படுத்த வேண்டும்?

பிரச்சினையின் கடுமைக்கேற்ப நீங்கள் எடுக்க வேண்டிய மருந்தின் அளவை மருத்துவர் தீர்மானிப்பார். அவர் கூறும் அளவுகளிலேயே மருந்தை உட்கொள்ளுங்கள்.

| | |
|---|---|
| புரோபன்தெலின் | 15மிகி, அன்றாடம் 3 முறை, உணவு உண்பதற்குக் குறைந்தது 1 மணி நேரத்திற்கு முன்னால், மற்றும் இரவில் 30 மிகி (அன்றாட கூடியபட்ச அளவு: 120 மிகி). |
| ஹியோசின் புடில்புரோமைட் | 20 மிகி, அன்றாடம் 4 முறை, உணவு உண்பதற்கு முன்னால் (அன்றாட கூடியபட்ச அளவு: 80 மிகி). |
| மெபெவெரைன் | 135மிகி, அன்றாடம் 3 முறை, உணவு உண்பதற்கு 20 நிமிடங்களுக்கு முன்னால். |
| அல்வெரைன் | 60 முதல் 120 மிகி, அன்றாடம் 3 முறை, உணவு உண்பதற்கு முன்னால். |
| குளோர்டியாசெபோக்சைட் (5 மிகி) / கிளிடினியம் (2.5 மிகி ) குழல் மாத்திரை (capsule) | 1 குழல் மாத்திரை, அன்றாடம் 3 - 4 முறை, உணவு உண்பதற்கு முன்னால். |

மருந்துகளை எப்போதும் பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள
காலாவதியான அல்லது இனிமேல் தேவைப்படாத மருந்துகளை வீசிவிடுங்கள

## மருந்து போட்டுக் கொள்ள **மறந்துவிட்டால்** என்ன செய்வது?

ஒரு வேளைக்குரிய மருந்தை எடுக்கத் தவறிவிட்டால் அல்லது மறந்துவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே உட்கொள்ளுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், முதலில் எடுக்கத் தவறிய மருந்தை விட்டுவிட்டு, அடுத்த வேளை வரை காத்திருங்கள். முதலில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு மருந்தோ அல்லது கூடுதல் மருந்தோ உட்கொள்ளாதீர்கள். மருந்தைப் பலமுறை எடுக்கத் தவறியிருந்தால், என்ன செய்ய வேண்டும் என்பதை மருத்துவரிடம் கேளுங்கள்.

## இந்த மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை ?

தசைப்பிடிப்பு மருந்துகள் பொதுவாக உடலில் பாதிப்புகளை ஏற்படுத்துவதில்லை. சில வேளைகளில் மலச்சிக்கல், பார்வை மங்குதல், அவசரமாக சிறுநீர் கழிக்கத் தோன்றுதல் அல்லது சிறுநீர் உடலில் தேங்குதல், மந்தம் மற்றும் வாய், தொண்டை மற்றும் தோல் உலர்தல் போன்ற பாதிப்புகள் ஏற்படலாம்.

மந்தமும் பார்வை மங்குதலும் இருந்தால், வாகனம் ஓட்டும்போது அல்லது இயந்திரங்களை இயக்கும்போது எச்சரிக்கையாக இருங்கள். உங்களின் விழிப்புணர்ச்சி குறையும் என்பதால் மதுபானங்களையும் மந்தம் ஏற்படுத்தும் மற்ற மருந்துகளையும் தவிர்த்துவிடுங்கள். மேலும், உங்களுக்கு இருக்கக்கூடிய மற்ற நோய்களையும் அவற்றுக்கு நீங்கள் உட்கொண்டு வரும் மருந்துகளையும் மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை ?

- வேறு மருந்துகள், மூலிகைகள், ஊட்டச்சத்து உணவுகள் அல்லது வைட்டமின்களை நீங்கள் ஏற்கனவே உட்கொண்டு வந்தால், அதை மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் தெரிவியுங்கள்.
- வேறு எந்த மருந்துக்காவது ஒவ்வாமை இருந்தால், அல்லது இந்த மருந்துக்கு ஒவ்வாமை ஏற்பட்டால், மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் உடனே தெரிவிக்க வேண்டும். ஒவ்வாமை ஏற்படும்போது பின்வரும் அறிகுறிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டது இருக்கும்: முகம்/கண்கள்/உதடுகள் வீங்கும், மூச்சுவிட சிரமமாக இருக்கும், அல்லது உடல் முழுவதும் அரிப்புடன் கூடிய தோல் தடிப்புகள் தோன்றும்.

நீங்கள் தாய்ப்பால் கொடுத்து வந்தால், கர்ப்பமாக இருந்தால், அல்லது சிகிச்சைக் காலத்தில் கர்ப்பமடைவதற்கு வாய்ப்பு இருந்தால், அதை மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

## மருந்தை நான் எப்படிப் **பாதுகாக்க** வேண்டும் ?

மருந்தின்மீது வெப்பமோ நேரடி வெளிச்சமோ படாதவாறு, அறை வெப்பநிலையில், ஓர் உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள். உங்களிடம் கூறப்பட்டாலன்றி, மருந்தை குளிர்ப் பதனப் பெட்டியில் வைக்காதீர்கள்.